Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 9, 2022

புதன்கிழமை நவம்பர் 09, 2022 | ஒளி: 08 கதிர்: 139 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## புயலில் சிக்கி கடலில் தத்தளித்த கப்பலில் இருந்த

# 264 அகதிகள் தப்பினர்

- 306 பேர் இலங்கை அகதிகளாவர்
- ஜப்பான் கப்பலின் உதவியுடன் மீட்பு
- மீட்கப்பட்டவர்கள் வியட்நாமில் ஒப்படைப்பு
- அகதிகளை அழைத்துவர இலங்கை அரசாங்கம் தலையிடு

இலங்கையின் நெருக்கடி நிலைமைகளை அடுத்து கனடாவில் தஞ்சமடையும் நோக்கில், இலங்கை தமிழ் அகதிகள் 306 பேருடன் பயணித்த கப்பல், சிங்கப்பூர் -பிலிப்பைன்ஸ் கடல் எல்லைக்கு அருகில் புயலில் சிக்கித் தவித்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர்- பிலிப்பைன்ஸ் நாடுகளின் உதவியுடன், ஜப்பான் கப்பலின் ஒத்துழைப்புடன் அவர்கள் மீட்கப்பட்டு, வியட்நாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் குறித்த அகதிகளை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்கும் முயற்சியில்

தொடர்ச்சி P2



# கணினிகளில் சிக்கல் கடவுச்சீட்டு இல்லை

குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தில் கணினி வலையமைப்பில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக, கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுமெனவும் எனவே, மறுஅறிவித்தல் வரை கடவுச்சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



கடன் மறுசீரமைப்பில்

# ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்

### சீனத் தூதுவரிடம் நிதி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

ஆர்.யசி

கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை அதன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தீவிரமாக முயன்று வருகின்ற நிலையில், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங்யை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

# இல்லை, இல்லை என்பதால் நம்பிக்கையை இழக்கின்றனர்

பா.நிரோஸ்



எவரும் காணாமலாக்கப்படவில்லை என காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் கூறியிருக்கிறார். மறுபக்கம் எங்களிடம் எவரும் சரணடையவில்லை என இராணுவம் கூறுகிறது.

தொடர்ச்சி P2

மக்களின் அரசியலமைப்பு உரிமைகளை

# ஆணவத்துடன் தொடர்ந்து நசுக்குகிறது அரசாங்கம்



### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அறிவிப்பு

நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளான பேச்சு, கருத்து மற்றும் அமைதியான போராட்டங்களை நடத்துவதற்கான

தொடர்ச்சி P2

# மக்கள் பிரகடனம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாள் செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களிலும் நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது.

(படம்: வடமலை ராஜ்குமார்)

# திட்டமிட்டு மலையக சமூகம் ஒதுக்கப்படுகிறது

பா.நிரோஸ்



தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டத் தொழிலைக் கைவிடக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு மலையக சமூகம் ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி, இறம்படை புளுபீல் தோட்டத்தில் இ.தொ.காவினர் முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாகவும் சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# உணர்வற்றவராக பதவி வகிக்கிறார்



பா.நிரோஸ்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்படும் போது அந்த நபரின் எதிர்காலம் முழுமையாக பாதிக்கப்படும் என்பதை பற்றி சற்றும் சிந்திக்காத, அந்நபரின் உறவுகளின் உணர்வு தொடர்பில் உணர்வற்றவரே ஜனாதிபதியாக பதவி வகிப்பதாக

தொடர்ச்சி P2

# எரிவாயுக்கு தட்டுப்பாடு இல்லை

உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்றும் சிலிண்டர்களை தொடர்ந்தும் சந்தைக்கு விநியோகித்து வருவதாகவும் லிட்ரோ, லாஃப்ஸ் ஆகிய எரிவாயு நிறுவனங்கள், நேற்று (08) அறிவித்தன.

மாதாந்தம் 5 ஆம் திகதிகளில் எரிவாயு விலை திருத்தம் அமல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில்,

தொடர்ச்சி P2

சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரம்

# எழுத்துமூல அடிப்படை ஆட்சேபனை சமர்ப்பிப்பு

2019ஆம் ஆண்டில் வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாக பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் ஊழியர் கனியா பனிஸ்டர் பிரான்சிஸின் சட்டத்தரணியால், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (08) எழுத்துமூல ஆரம்ப ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# மாணவன் தாக்கி மாணவன் மரணம்

கனகராசா சரவணன்

ஒரே வகுப்பில் கல்வி கற்கும் ஒத்த வயதுடைய இரண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில், 13 வயது மாணவன் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

கந்தக்காடு களேபரம்

# 201 கைதிகளுக்கு விளக்கமறியல்

### விசாரணைக்கு ஐவர் அடங்கிய குழு நியமனம்

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட கைதிகள் 201 பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, பொலன்னறுவை மற்றும் ஹிங்குரங்கொட நீதவான் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# சட்டத்தரணிகள் சகலரும் நீதியைக் கோரி நிற்பர்

பா.நிரோஸ்

தேர்தலை ஒத்தி வைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அவ்வாறு ஒத்தி வைக்க நடவடிக்கை எடுத்தால் நாடு முழுவதும் அனைத்து சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தை நாட நேரிடும் என எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# சம்பந்தனுக்கு 3 மாத விடுமுறை

பா.நிரோஸ்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி.க்கு 3 மாதங்கள் விடுமுறை வழங்க பாராளுமன்றம் அனுமதித்தது. பாராளுமன்றம் நேற்று (8) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் அவரது கோரிக்கைக்கு அரசு தரப்பினரும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 264 அகதிகள் தப்பினர்

வெளிவிவகாரத்துறை அமைச்சு, வியட்நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது.

லேடி ஆர் -3 எனும் மீன்பிடி கப்பல் 306 இலங்கைத் தமிழ் அகதிகளுடன் கனடா நோக்கி பயணமாகியுள்ள நிலையில், நேற்று முன்தினம் (7) வியட்நாம் , சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கடல் எல்லைகளுக்கு அருகில் கப்பல் சூறாவளியில் சிக்கியுள்ளது.

கப்பலில் இருந்த அகதி ஒருவர் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் ஒரு சிலருக்கு தொடர்பை ஏற்படுத்தி தமது நிலைமையை தெரிவித்துள்ளதை அடுத்து கப்பல் தொடர்பான தகவலை சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு தெரிவித்துள்ளனர்.

தகவல் தெரிவிக்கப்பட்ட வேளையில் குறித்த கப்பலானது வியட்நாமிற்கு மிக அருகில் பயணித்துக்கொண்டிருந்துள்ளது. வியட்நாம் அரசாங்கம் பிலிப்பைன்ஸ் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுடன் கலந்துரையாடி உடனடியாக மீட்பு பணிகளை ஆரம்பித்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் குறித்த கப்பலுக்கு மிக அருகில் ஜப்பான் கப்பலொன்று பயணித்துக்கொண்டிருந்த வேளையில் ஜப்பான் கப்பலுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களின் உதவியுடன் மீட்பு பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது, லேடி ஆர்- 3 கப்பலில் 264 ஆண்களும், 19 பெண்களும், 20 சிறுவர்களும் இருந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. வியட்நாமுக்கு அழைத்துவரப்பட்ட அவர்கள், வியட்நாம் பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் 306 இலங்கையர்களும் பயணித்த லேடி ஆர் -3 கப்பலானது இலங்கைக்கு சொந்தமான கப்பல் அல்ல எனவும், இவ்வாறு பயணித்தவர்கள் இலங்கையில் இருந்து பயணிக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளதாகவும் இலங்கை கடற்படை ஊடகப்பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

இவர்களை மீட்கும் பணிகளில் சர்வதேச நாடுகள் ஈடுபட்டுள்ள நிலையில் இலங்கை கடற்படையின் ஒத்துழைப்பை கோரவில்லை எனவும் அவர் தமிழ் மிரருக்கு தெரிவித்தார்.

இந்நிலையில், அகதிகளாக வியட்நாமில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அவர்களை இலங்கைக்கு அழைத்துவர வெளிவிவகாரத்துறை அமைச்சு, வியட்நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, தமிழ்மிரருக்கு உறுதிப்படுத்தினார்.

## கணினிகளில் சிக்கல்...

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் கணினி கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் கணினிக் கடடமைப்பை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்

இலங்கையின் கடன் நெருக்கடி நிலைமைகள் குறித்தும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள இலங்கை முன்னெடுக்கும் நகர்வுகள் குறித்தும் இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்தியதுடன், இருதரப்பு கடன் வழங்குநர்களை இணக்கத்துக்கு கொண்டுவருவதன் தேவைப்பாடு குறித்தும் நேற்று முன்தினம் (7) இடம்பெற்ற இந்த சந்திப்பில் எடுத்துக்கூறியுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனாவின் முழுமையான ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகவும், பல்வேறு சவால்களை சமாளிக்க சீனாவின் தொடர்ச்சியான மற்றும் உறுதியான ஆதரவு வேண்டும் என்பதையும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். சீனாவின் இணக்கம் இருப்பின் இந்த ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், இதில் கால தாமதம் ஏற்படும் பட்சத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி அடுத்த ஆண்டு மார்ச் வரையில் தள்ளிப்போகும் சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கோரிக்கைகள் குறித்து சீனா ஆராய்வதாகவும், நெருக்கடி நிலைமைகளில் இலங்கைக்கு சீனா எப்போதுமே ஒத்துழைப்புகளை வழங்கி வந்துள்ளது, தனிப்பட்ட ரீதியில் சீனாவின் ஒத்துழைப்புகள் எப்போதுமே இலங்கைக்கு இருக்கும் எனவும் சீன தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

## ஆணவத்துடன் தொடர்ந்து நசுக்குகிறது அரசாங்கம்

சுதந்திரத்தை அரசாங்கம் ஆணவத்துடன் தொடர்ந்து நசுக்குகிறது என்று, கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், நேற்று (08) தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும் மற்றும் அவற்றுக்கு எதிராக அமைதியான போராட்டங்கள் அல்லது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தும் மனித உரிமைகளுக்கான போராட்டக்காரர்களுக்கு எதிராக தற்போதுள்ள அரசாங்கத்தால் நடத்தப்படுவது கொடூரமான மற்றும் சகிக்க முடியாத அடக்குமுறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதுமட்டுமின்றி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறான மற்றும் நியாயமற்ற முறையில் முறையில் பயன்படுத்துவதற்கும், சமூகத் தலைவர்கள் மற்றும் அத்தகைய கொள்கைகளுக்கு அமைதியான எதிர்ப்பில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கும் நாங்கள் அரசாங்கத்தை கண்டிக்க விரும்புகிறோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பிக்கு மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் உட்பட மூவர், அவர்கள் மீது தெளிவான குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் அநியாயமான முறையில் 75 நாட்களுக்கும் மேலாக காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கர்தினால் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இந்த வகையான நெறிமுறையற்ற நடைமுறையை எந்த சூழ்நிலையிலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இருவரும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது என்பதையும் குறிப்பிட்டார்.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை, எவ்வித தீவிர உணர்வும் இன்றி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுதலை செய்ய பரிந்துரைக்கப்படும் முறையற்ற விதம் குறித்தும் எமது ஆச்சரியத்தை வெளிப்படுத்த விரும்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திட்டமிட்டு மலையக சமூகம் ஒதுக்கப்படுகிறது

இறம்படை புளுபீல் தோட்ட நிர்வாகம் அங்குள்ள தொழிலாளர்களுக்கு, ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி, (ஈ.பி.எப்., ஈ.டி.எப்) வழங்குவதில்லை. இவற்றுக்கு எதிராக அமரர் ஆறுமுகன் தொண்டமான் மூன்று வருடங்களுக்கு முன்பாக வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தார். அந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது.

அங்குள்ள தொழிலாளர்களுக்கு ஈ.பி. எப், ஈ.டி.எப் பணம் செலுத்துவதாக நிர்வாகம் கூறியுள்ளதோடு, தொழிலாளர்களுக்கு 80 ஆயிரம் ரூபாய் வரையில் நிவாரணப் பணம் காணிகளை வழங்குதவாகவும் தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த வெற்றியை அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

மலையக மக்கள் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம்தான் வாழ்வதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் நாடளாவிய ரீதியில் வாழ்கிறார்கள். கொழும்பில் உள்ள தொழிலதிபர்கள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது பூர்வீகம் மலையகமாகதான் இருக்கும் எனவும் தெரிவித்தார்.

எங்குச் சென்றாலும் மலையகத் தமிழர்கள் அடிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்கு சென்றாலும் அடிவாங்கிக்கொண்டிருக்கும் இனம் நாம் கிடையாது. தலை குனியும், தைரியமற்ற சமூகமாக நாம் மாறிக்கொண்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

## உணர்வற்றவராக பதவி வகிக்கிறார்

குற்றம்சாட்டிய ஜே.வி.பி தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, பொருளாதார படுகொலையாளியான பசில் ராஜபக்ஷ அமெரிக்காவில் சுகபோகமாக வாழும் போது வரி அதிகரிப்பால் நாட்டு மக்களை வதைப்பது எந்தளவுக்கு நியாயமானது எனவும் கேள்வி எழுப்பினார்.

பொருளாதார பாதிப்பால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டம் இரத்தம் வெளிப்படும் வகையில் அமையும் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளதை அரசு மறந்து விடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மேலும் பேசுகையில்,

பொருளாதார பாதிப்பு ஒட்டுமொத்த மக்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அவர் உலகத்தை வலம் வருகிறார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியாளருக்கு தண்டனை வழங்குவதாக குறிப்பிட்டவர்கள் தற்போது அவரையே தமது தலைவராக நியமித்துள்ளமை எந்த வகை அரசியல்? அரச நிதியை மோசடி செய்தவர்கள் சுதந்திரமாக இருக்கின்ற போது தொழிற்துறையினர் மீது கடுமையான வரி அதிகரிப்பது நியாயமானதா? பொருளாதார பாதிப்பால் படித்த தொழிற்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்றார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து அரசு தனக்கு எதிரான அடக்கு முறைகளை எவ்வாறு முடக்குவது என்பது குறித்தே அவதானம் செலுத்துகிறது என்றார்.

பொருளாதார பாதிப்பினால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டம் இரத்தம் வெளிப்படும் வகையில் அமையும் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். ஜனநாயகத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தை தடுக்க அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அரசாங்கத்துக்கு எதிராகவே அமையும்,ஆகவே ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட வேண்டும் என்றார்.

## இல்லை, இல்லை என்பதால்...

இதுபோன்ற கருத்துக்களால் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகளில் பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையை இழக்கின்றனர் என கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய (8) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நீதி அமைச்சர் வட மாகாணத்தில் நடமாடும் சேவைகளை முன்னெடுப்பதை நான் வரவேற்கிறேன். இது வடக்கு மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். சபையில் உரையாற்றிய நீதி அமைச்சர் இந்தியாவிலிருந்து வந்து மீள்குடியேறியவர்கள் தொடர்பில் பேசியிருந்தார்.

உண்மையில் 33 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்தியாவிலிருந்த வந்து இலங்கையில் மீள் குடியேற விருப்பத்துடன் இருக்கிறார்கள். எனினும் நாட்டின் தற்போதைய சூழல், மீள் குடியேறுவதாக இருந்தால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகளால் நாட்டுக்கு வருவதில் அவர்கள் தயங்கி வருகிறார்கள். எனவே இது தொடர்பில் நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் நாட்டில் எவரும் காணாமல் போகவில்லை என பகிரங்கமாக அறிவித்துள்ளார். இதனால் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவே இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டது. எனினும் விசாரணைகளை மேற்கொள்ளாது இதுபோன்ற கருத்துகளை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சுயாதீனமான, நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லை

இந்த முறையும் லிட்ரோ எரிவாயு விலை குறைக்கப்படும் என்ற அச்சத்தில் விற்பனையாளர்களால் எரிவாயு முற்பதிவு செய்யப்படவில்லை.

இதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து விநியோகம் சீராக இடம்பெறுவதாக கடந்த மாத இறுதியில், லிட்ரோ நிறுவன தலைவர் முதித பீரிஸ் அறிவித்திருந்தார்.

எனினும், லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் ஆகிய இரண்டு வகையான எரிவாயுக்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இரண்டு நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர், தட்டுப்பாடு இன்றி எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்து வருவதாக அறிவித்தனர்.

மேலும், ஏதேனும் ஒரு பகுதியில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டால் நிறுவனத்துக்கு தெரியப்படுத்துமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லாஃப்ஸ் கேஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ. கே. எச். வேகபிட்டியவும் தமது நிறுவனம், எரிவாயு சிலிண்டர்களை தட்டுப்பாடு இன்றி விநியோகித்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

## எழுத்துமூல அடிப்படை ஆட்சேபனை சமர்ப்பிப்பு

குற்றவியல் சட்டத்தின் 189 மற்றும் 190 பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை பேணுவதை சவால் செய்யும் வகையில் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ கடந்த அமர்வில் ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

அதனையடுத்து, எழுத்துமூல ஆட்சேபனைகளை சமர்ப்பிக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலேல்ல உத்தரவிட்டிருந்த நிலையில், நேற்றையதினம் குறித்த எழுத்துமூல ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கை ஜனவரி 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்த நீதிபதி, அடுத்த விசாரணைத் தினத்தன்று எழுத்துமூல பதிலை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அல்லது அண்மித்த காலப்பகுதியில் கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியில் வைத்து வெள்ளை வாகனத்தில் வந்த ஐவர், தன்னைக் கடத்திச் சென்று துப்பாக்கி முனையில் மிரட்டி பல மணிநேரம் தடுத்து வைத்ததாகவும், நாட்டை விட்டு தப்பிச் சென்ற சீ.ஐ.டியின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா குறித்து விசாரணை நடத்தியதாகவும் கனியா குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

எனினும், மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பொய்யான சாட்சியங்களை சோடனை செய்ததாக கனியா பனிஸ்டர் மீது சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

இலங்கை அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்காக பொய்யான தகவல்களை வழங்கியதாகவும், தனது கடத்தல் குறித்த விடயத்தில் பொய்யான ஆதாரங்களை உருவாக்கியதாகவும் கனியா பன்னிஸ்டர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மாணவன் தாக்கி மாணவன் மரணம்

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்தில் 8 ம் ஆண்டில் கல்விப்பயிலும் தம்பிலுவில் ஏ.பி.சி வீதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிவபாலன் கிசாஷாந்த என்ற மாணவனே நேற்று (08) மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம், செவ்வாய்க்கிழமை (08) பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த திருக்கோவில் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவதினமான நேற்று (08) பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைகின்ற நேரத்தில் வகுப்பறை மேசையில் சிவபாலன் கிசாஷாந்த பெயின்றால் கீறியுள்ளார்.

சகமாணவனின் கை அந்த பெயின்றில் பட்டதுடன், கீறப்பட்டு இருந்ததும் அழிந்துவிட்டது. இதனையடுத்தே இவ்விருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதில், மரணமடைந்த மாணவனின் வாயில் இருந்து வகுப்பறைக்குள் வைத்தே நுரை தள்ளிவிட்டது.

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அம்மாணவன் உயிரிழந்தார். தாக்கிய சக மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் இருவரும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அறியமுடிகின்றது.

உயிரிழந்த மாணவனின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக தெரிவித்த திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## 201 கைதிகளுக்கு விளக்கமறியல்

அத்துடன், குறித்த மோதல் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளுக்காக சிரேஷ்ட அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சரிடம் அறிக்கை ஒன்றை கோரியுள்ள நிலையில், ஐவரடங்கிய குழுவினூடாக தயாரிக்கப்படும் அறிக்கை, நீதி அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (06), கைதிகள் நீராடுவதற்காகப் பயன்படுத்தும் இடத்திலிருந்த வாளியொன்றை பெற்றுக்கொள்வது தொடர்பாக காலி பகுதியைச் சேர்ந்த கைதிக்கும் மாதம்பே பகுதியைச் சேர்ந்த கைதிக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்தே இந்த களேபம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தரணிகள் சகலரும் நீதியைக் கோரி நிற்பர்

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயாதீன குழுக்களை அமைக்க வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் அரசாங்கம் அவசரப்படுவது ஏனெனில் தங்களின் உறுப்பினர்களை உள்ளே அனுப்புவதற்காகவே ஆகும். குறிப்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தலைசாய்க்கும் உறுப்பினர்களை நியமித்து தேர்தலை ஒத்தி வைக்கவே முயற்சிக்கின்றனர். அதனை செய்ய வேண்டாம்.

அரசாங்கம் இன்னும் பாடம் படிக்கவில்லை என்பதே இதன்மூலம் தெரிகின்றது. தேர்தலை ஒத்தி வைத்து, அடக்குமுறைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். தேர்தலை ஒத்தி வைத்தால் இலங்கை முழுவதும் உள்ள அனைத்து சட்டத்தரணிகளும் நீதிமன்றம் செல்ல நேரிடும் என்றார்.

## சம்பந்தனுக்கு...

இணங்கிய நிலையில் இரா. சம்பந்தன் எம்.பி.க்கு 3 மாதங்கள் விடுமுறை வழங்க பாராளுமன்றம் அனுமதி வழங்குவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

**சிறுநீரகம் தேவை**

A+/A-/0+/0- குருதி வகையில் உள்ள ஒருவருக்கு உடனடியாக சிறுநீரகம் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0718371432/0712406326



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



# விளக்கம் கோரும் பிரதமர் அலுவலகம்

13 வயது பெண் பிள்ளையை கர்ப்பிணிப் பெண் என கூறிய விவகாரம் தொடர்பில் பொலன்னறுவை மாவட்டச் செயலாளரிடம் பிரதமர் அலுவலகம் விளக்கம் கோரியுள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டிருந்த எதிர்க்கட்சி எம்.பி ரோஹினி கவிரத்ன, பிள்ளைகளுக்கு உண்பதற்கு உணவில்லை எனப் பேசப்பட்ட விடயம் தொடர்பில் பொலன்னறுவை மாவட்டச் செயலாளர் 13 வயது பெண் பிள்ளை ஒருவரை கர்ப்பிணிப் பெண் எனக் கூறிவிட்டு பின்னர், தான் தவறுதலாகக் கூறியதாகத் தெரிவித்து மன்னிப்புக்கோரியுள்ளார்.

எனினும், குறித்த 13 வயது பெண் பிள்ளைக்கு இதனால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு என்ன பதில் கூறப்போகிறீர்கள் என பிரதமரிடம் வினவினார். இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஸ் குணவர்தன பிள்ளைகளுக்கு உள்ள வாழ்வதற்கான உரிமையை அரச ஊழியர்களால் பறிக்கவோ அந்த உரிமையை நிந்திக்கவோ முடியாது என்றார். மேலும் பொலன்னறுவை மாவட்ட செயலாளர் இந்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்க வேண்டுமென பிரதமர் கடிதம் ஊடாக அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடு வெறுக்கத்தக்கது



வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக நாம் செயற்படும்போது, அதற்கு தடை ஏற்படும் வகையில் செயற்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாடு வெறுக்கத்தக்கது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஒக்டோபர் 31, நவம்பர் முதலாம் திகதிகளில் வடக்கு மாகாணத்தில் விசேட நடமாடும் சேவைகளை நாம் முன்னெடுத்தோம். இதேவேளை, பல்வேறு காரணங்களுக்காக நாட்டிலிருந்து இந்தியாவுக்கு இடம்பெயர்ந்த 11,782 பேர் மீள நாட்டுக்கு வந்துள்ளனர். தேசிய அடைய அட்டை, பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கியமான ஆவணங்கள் தற்போது இவர்களிடம் இல்லை. எனவே அடிப்படையான இந்த ஆவணங்களை அம்மக்களுக்குப் பெற்றுகொடுக்க 12 அமைச்சுகள் ஒன்றிணைந்து நீதி அமைச்சின் ஊடாக விசேட செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்படுகிறது.

வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற வகையில் வெளிப்படைத் தன்மையுடன் தீர்வு காண அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். கிளிநொச்சி மாவட்ட செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட ஒருசிலர் தடை ஏற்படுத்தும் நோக்கில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். எனினும் இதனை பொருட்படுத்தாது நாம் நடமாடும் சேவையை முன்னெடுத்தோம். இந்த நடமாடும் சேவைக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய சி.வி. விக்னேஸ்வரன் எம்.பிக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன். கூட்டமைப்பினரும் தீர்வு காண அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கினார்கள் எனவும் கூறினார்.

## காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலத்தின்

# தலைவருக்கு பைத்தியமா?



நாட்டில் எவரும் காணாலமலாக்கப்படவில்லை எனக் கூறும் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலத்தின் தலைவருக்கு பைத்தியமா என வினவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, உடனடியாக தலைவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இதுபோன்ற கருத்துகளை கூற வேண்டாமென அவரிடம் கூறுங்கள். எவரும் காணாமலாக்கப்படவில்லை என்றால் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் எதற்கு? பாராளுமன்றத்தில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இது தொடர்பான சட்டமொன்றைக் கொண்டுவந்து அலுவலகத்தை ஸ்தாபித்தோம். மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் நாம் இக்காரியாலயங்களை திறந்து வைத்தோம் எனவும் தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை எங்களால் மேற்கொள்ள முடியாதளவுக்கு அப்போது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் பிரச்சினைகளை கொடுத்தார்கள் எனவும் தெரிவித்தார்.

# ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றங்கள் செய்யப்படாது

**பாடசாலை ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கோ, மாணவர்களின் சீருடைகளை இல்லாமல் செய்வதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று (8), எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,**



எமது நாட்டுக்கு பொருத்தமான கலாசாரத்துடனேயே ஆசிரியர்களின் ஆடைகள் அமைந்துள்ளன. ஆசிரியர்கள் நாங்கள் அறிந்த காலம் முதல் சாரி, ஒசரியையே அணிகின்றனர். முஸ்லிம் ஆசிரியைகள் சாரி அணிந்து பர்தா போட்டுக்கொள்கின்றனர். பாடசாலைகளின் கலாசாரங்கள் இவற்றிலேயே உள்ளன. இவற்றை மாற்ற முடியாது. அதற்கு இடமளிக்கவும் மாட்டோம். பின்லாந்தில் இப்படித்தான் ஆடைகள் இருக்கின்றன என்று சிலர் கூறலாம். அது குளிரான நாடு. அதனால் அந்த நாட்டுக்குப் பொருத்தமான வகையில் ஆடைகள் அமைந்துள்ளன. அவற்றை இங்கே செய்ய முடியாது.

> **நாங்கள் அறிந்த காலம் முதல் சாரி, ஒசரியையே அணிகின்றனர். முஸ்லிம் ஆசிரியைகள் சாரி அணிந்து பர்தா போட்டுக்கொள்கின்றனர். பாடசாலைகளின் கலாசாரங்கள் இவற்றிலேயே உள்ளன**

இதனால் எந்தக் காரணத்திற்காகவும் பாடசாலை ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றம் செய்வதற்கோ, மாணவர்களின் சீருடைகளில் மாற்றம் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது என்றார்.

# ஆதரவு வழங்குமாறு சபாநாயகர் கோரிக்கை



> **நியமிக்கப்படவுள்ள குழுக்கள் தொடர்பில் இன்றைய தினத்தில் இறுதித்தீர்மானத்துக்கு வந்து அனைத்துப் பணிகளையும் ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்கவும்**

பாராளுமன்றத்தில் நியமிக்கப்படவுள்ள 17 துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கான சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் நேற்று (08) அறிவித்தார்.

அதேபோன்று, நியமிக்கப்படவுள்ள குழுக்கள் தொடர்பில் இன்றைய தினத்தில் இறுதித்தீர்மானத்துக்கு வந்து அனைத்துப் பணிகளையும் ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்குமாறு சபாநாயகர் அனைத்து உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய, நேற்று (08) இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மற்றும் தெரிவுக்குழுக் கூட்டங்களில் இந்தத் துறைசார் மேற்பார்வைக்குழுக்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு மற்றும் வழிவகைகள் பற்றிய குழு ஆகிய மூன்று குழுக்களை நியமிப்பது தொடர்பிலும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

# செலவுகளை குறைக்க வேண்டும்



அரசாங்கத்தின் செலவுகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் பாரியளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, செலவுகளைக் குறைப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து சபையில் நேற்று (08) உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்த உரையாற்றிய அவர், இறக்குமதி, ஏற்றுமதி கட்டளைச் சட்டத்தின் கீழ் குளியல் அறைக்கான அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்ய தடை விதிக்க வேண்டுமென அரசாங்க நிதி பற்றிய குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை இரு தடவைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், இது தொடர்பில் நிதி அமைச்சு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அரசாங்கம் நிதி பற்றிய குழு அறிவித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் அரசாங்கத்தின் செலவுகள் பாரியளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக கடந்த வருடம் 6.2 ட்ரில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த வருடத்தில் 7.9 ட்ரில்லியன் செலவிடப்பட்டுள்ளன. இது பாரிய அதிகரிப்பு எனவும் தெரிவித்தார்.

> **கடந்த வருடம் 6.2 ட்ரில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த வருடத்தில் 7.9 ட்ரில்லியன் செலவிடப்பட்டுள்ளன. இது பாரிய அதிகரிப்பாகும்**

இது தொடர்பில் வரவு செலவு திட்டத்தில் என்ன எவ்வாறான யோசனைகள் முன்வைக்கப்படும் என்பதை பார்ப்போம். வரி அதிகரிப்பின் ஊடாக வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்கத்தின் செலவுகளை எவ்வாறு குறைப்பது என்பது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில்

# போதைப்பொருள் பாவனையை

## கட்டுப்படுத்த இராணுவ சோதனைச் சாவடிகள்

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் முயற்சியாக, முக்கியமான இடங்களில் இராணுவத்தினர் சோதனைச் சாவடிகள் அமைத்து, வீதியால் பயணிப்போரை சோதனையிடுவார்கள் என யாழ்ப்பாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக, வடக்கு மாகாண ஆளுநரின் பரிந்துரைக்கு அமைய, இவ்வாறு இராணுவத்தினரின் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு போதைப்பொருள் விநியோகம் மற்றும் போதைப்பொருள் பாவிப்போர் கைது செய்யப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், போதைப்பொருள் விற்பனை செய்வோர், அதை நுகர்வோர் தொடர்பில் ஏதாவது தகவல்கள் தெரிந்தால், பொதுமக்கள் அருகில் உள்ள இராணுவ முகாமில் தகவல்களைத் தெரிவிக்கும் பட்சத்தில், அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்ததோடு, பொதுமக்கள் இந்த விடயத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.



# புதிய நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து தனியார் பஸ் சேவைகள்

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண நகரப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து, அனைத்து உள்ளூர், வெளியூருக்கான தனியார் பஸ் போக்குவரத்து சேவைகள் நேற்று (08) முதல் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்று காலை யாழ். மாநகர மேயர் வி. மணிவணணன், ஆணையாளர் இ. ஜெயசீலன், தனியார் பஸ் சங்கங்களில் தலைவர்கள், பிரதிநிதிகள், பொலிஸார் இது தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டதுடன், தற்போது போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு, அடுத்த வாரம் அது தொடர்பில் ஆராய்ந்து, இத்திட்டத்தை மேம்படுத்தவுள்ளதாகவும் மாநகர மேயர் தெரிவித்தார்.









## தேசிய ரீதியில் சாதனை

துனுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட யோகபுரம் மகா வித்தியாலயத்தில் இருந்து சென்று, தமிழ்த் தின போட்டியில் தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (08) நடைபெற்றது. தமிழ் அறிவு வினாபோட்டி, தமிழ் இலக்கண அறிவு போட்டி என்பனவற்றில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில், சாதனை மாணவர்கள், மல்லாவி நகரிலிருந்து மாலைகள் அணிவிக்கப்பட்டு, ஊர்வலமாக பான்ட் வாத்தியங்கள் முழங்க பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

செ. கீதாஞ்சன்

53 வயது நெதர்லாந்து வாசியுடன்

# நிர்வாணமாக வீடியோ கோலில் கதைக்குமாறு பெற்றோர் வற்புறுத்தினர்

**அச்சுவேலி சிறுமி பொலிஸில் வாக்குமூலம்**

எம். றொசாந்த்

நெதர்லாந்து நாட்டை சேந்த 53 வயதான நபரைத் திருமணம் செய்யுமாறு, தனது பெற்றோர் வற்புறுத்தி தாக்கினார்கள் என 15 வயதான சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: குறித்த சிறுமி, பிரான்ஸ் நாட்டில் இருந்து அச்சுவேலிக்கு திரும்பியிருந்த 20 வயதான இளைஞனுடன், சில தினங்களுக்கு முன்னர் தலைமறைவாகி இருந்தார்.

அது தொடர்பில், சிறுமியின் பெற்றோரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, தலைமறைவான சிறுமியும் இளைஞனும் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதன் போது, பாலியல் வன்புணர்வுக்கு சிறுமி உள்ளாகவில்லை எனத் தெரியவந்ததையடுத்து, அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சிறுமியிடம், பொலிஸாரும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளும் முன்னெடுத்த விசாரணையின் போது, சிறுமி கூறியதாவது: "எனது பெற்றோர் நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் 53 வயதான நபரை திருமணம் செய்யுமாறு, வற்புறுத்தி, என்னைத் தாக்கி வந்தார்கள். நெதர்லாந்தில் உள்ளவருடன் 'வீடியோ கோல்' மூலம் உரையாடுமாறு வற்புறுத்தினார்கள். அவர், என்னை நிர்வாணமாக வீடியோ கோலில் உரையாடுமாறு கோரிய போது, நான் அதற்கு மறுத்து, பெற்றோரிடம் தெரிவித்தேன். அவர்கள், அவருடன் அவ்வாறு உரையாடுமாறு வற்புத்தினார்கள்" என வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதையடுத்து, சிறுமியின் பெற்றோரை கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# காணி விடுவிப்பு தொடர்பாக அமெரிக்க செனட் சபையின் பிரதிநிதிகள் அக்கறை

நிதர்சன் வினோத்

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர், மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தனை நேற்று முன்தினம் (07) சந்தித்து கலந்துரையாடினர். அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான பிரதிநிதிகள் குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு விஜயம் செய்து, தவிசாளருடன் கலந்துரையாடினர்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தவிசாளர் சோ. சுகிர்தன், படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தனியார் காணிகள், பல ஆண்டுகளாகியும் மக்கள் மீள்குடியேற்றப்படாமை, படையினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவது தொடர்பாக கேட்டறிந்துகொண்டனர்.

1,614 ஏக்கர் காணியை சுவீகரித்திருப்பது தொடர்பாக, கடந்த மாதம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சால் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டதுடன் தொடர்புடைய ஆவணங்களும் அமெரிக்க செனட் சபையின் குழுவினருக்கு கையளிக்கப்பட்டன.

பொது மக்களின் காணிகளை மக்களிடமே வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்போம் எனவும் இதனை உயர்மட்டத்துக்கு கொண்டு செல்வோமெனவும் அமெரிக்க செனட் சபையின் குழுவினர் தெரிவித்தார்கள் என்றார்.

பேராளர் மாநாட்டில் பங்கு கொள்ள விடாமல் தடுத்தது

# கட்சிக்கும் சமூகத்துக்கும் செய்த துரோகமாகும்

## அதிருப்தியாளர்களான மட்டக்களப்பு பிரதேச மு.கா ஆதரவாளர்கள்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு, மட்டக்களப்பிலிருந்து சென்றவர்களை மாநாட்டில் பங்குபற்ற விடாமல் தடுத்தமை, கட்சிக்கும் சமூகத்துக்கும் செய்த துரோகமாகும் என ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களில் இருந்து புத்தளம் சென்ற அதிருப்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு, அக்கட்சியின் தலைவர் றவூப் ஹக்கீம் தலைமையில் புத்தளம் கே.ஏ பாயிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் திங்கட்கிழமை (07) நடைபெற்றது.

அவ்விதம் ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களிலிருந்து ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர்களான ஏ. அப்துல் நாஸர், எம்.ஐ தஸ்லீம் ஆகியோரின் தலைமையில் சுமார் 40 பேர் சென்றிருந்தனர்.

எனினும், இவர்கள் மாநாட்டு மண்டபத்துக்குள் உள்நுழையச் சென்றபோது, வாயிலில் வைத்து, "உங்களை அனுமதிக்க தலைமைப் பீடம் அனுமதி வழங்கவில்லை" என்றுகூறப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

இதுகுறித்து, அதிருப்பதியாளர்களான மட்டக்களப்பு பிரதேச ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சி ஆதரவாளர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது: இந்தக் கட்சியை அழிப்பதற்காக செயற்பட்டவர்கள், இன்று கட்சியின் தலைமையால் கனவான்களாகப் போற்றப்பட்டு, கட்சிக்குள்ளே கௌரவ விருந்தினர்களாக உள்ளார்கள். நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம்.



கடந்த தேர்தலில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவத்தையும் தன்மானத்தையும் பாதுகாத்தது மட்டக்களப்பு மாவட்டம். அதில் தெரிவான, தற்போதைய சுற்றாடல் அமைச்சரான கட்சியின் பிரதி தவிசாளர், அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை எடுத்து, பிரதேச மக்களுக்கும் நாட்டுக்கும் சேவையாற்றப் புறப்பட்டமைக்காக, கட்சியின் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு வழக்கை எதிர்கொண்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவத்தைக் காத்த, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் புறந்தள்ளப்பட்டமை துரோகமும் அநீதியுமாகும் என்றனர்.





## பறங்கியர் கலாசார தின விழா

கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட பறங்கியர் கலாசார யூனியனும் இணைந்து, கிழக்கு மாகாணத்தில் முதற்றடவையாக, பறங்கியர் கலாசார தின விழாவை ஞாயிற்றுக்கிழமை (06) ஏற்பாடு செய்திருந்தன. கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷன் தலைமையில் சின்ன உப்போடையிலுள்ள போர்த்துகீஸ் பறங்கியர் அறக்கட்டளை சமூக மற்றும் கலாசார மைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

அத்துடன், நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தையர்கள், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் பேராசிரியருமான சாமஸ் ராகல், பறங்கியர் கலாசார ஒன்றியத்தின் தலைவர் டெரி ஸ்டொக்கர்ஸ், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி வளர்மதி ராஜ் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

பறங்கியர் சமூகத்திற்கே உரித்தான பாரம்பரிய இசை இசைக்கப்பட்டு அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் 'கப்பிறிஞ்ஞா', 'லன்ஷஸ்' நடனங்களும் அரங்கேற்றப்பட்டன.

ஏ.எச்.ஏ ஹுஸைன்





# மட். சிவானந்தாவுக்கு இரண்டு வெள்ளி பதக்கங்கள்

கே.எல்.ரி யுதாஜித்

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை மட். சிவானந்த வித்தியாலயம் தனதாக்கிக் கொண்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில், குழு இசை நிகழ்ச்சியில் திருமதி. ஜெ.கலிங்கேஸ்வரன் ஆசிரியரின் வழிப்படுத்தலில் பங்குகொண்ட மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் தனி இசை நிகழ்ச்சியில் மாணவன் சிற்சபேசன் இரண்டாம் இடத்தையும் பெற்று வெள்ளிப் பதக்கங்களை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்து பெருமை சேர்த்தார்கள்.



மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின்

# புதிய இயக்குநர் வாரியம்

எப். முபாரக்

மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபை கூட்டமும் புதிய இயக்குநர்வாரிய நிர்வாகத் தேர்வும் ஞாயிற்றுக்கிமை (06) மூதூர் பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தலைவர் க. சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் 29 கிளைகளை சேர்ந்த 99 பேராளர்கள் கலந்துகொண்டதோடு அடுத்த ஆண்டுக்கான ஒன்பது புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களாக திருமதி ஜீவனந்தன் ஜெயசித்திரா, ஜனாபா முத்து முஹம்மது பர்ஸானா, ஜனாப் நிசார் முஹம்மது முசாகீர், ஜனாப் அமீர் சிபான்; ஏனைய ஐந்து உறுப்பினர்களாக ஜனாப் அப்துல் சலாம் முஹம்மது சபீக், ஜனாப் அப்துல் லத்தீப் நௌபிர், சாகுல் ஹமீது முஹம்மது அதீக், ஜனாப் முஹம்மது சரிபு பரீஸ், சரவணமுத்து வர்ணகுலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



இடமாற்ற மேன்முறையீடு தொடர்பான

# இடமாற்றப் பட்டியல் வெளியீடு

எம்.எஸ்.எம் ஹனீபா

2023ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற மேன்முறையீடு தொடர்பாக கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு, இடமாற்ற சபையால் சிபாரிசு செய்யப்பட்ட இடமாற்றப் பட்டியல் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சுர் நேற்று (08) தெரிவித்தார்.

புதிய இடமாற்றங்கள் அனைத்தும் 2023 ஜனவரி இரண்டாடம் திகதி முதல் செயற்படும். அதற்கேற்ற வகையில் இடமாற்ற உத்தியோகத்தர்கள் விடுவிப்புச் செய்யப்பட வேண்டுமென திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு சபையால் மீளாய்வு செய்து அளிக்கப்பட்ட மேற்முறையீட்டு தீர்மானங்களை w ep.gov.lk எனும் கிழக்கு மாகாண இணையத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தோட்ட நிர்வாகங்களின் செயல்களைக் கண்டு

# சபையில் சீறினார்

## ஜெனீவா செல்வேன் என்கிறார் சுரேஷ்

பெருந்தோட்டத் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் தோட்ட நிர்வாகங்கள் செயற்படுகின்றனவா எனக் கேள்வியெழுப்பிய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், அப்பாவி தொழிலாளர்களை மிரட்டுவதற்காகவா தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தோட்ட நிர்வாகம் பொலிஸ் நிலையங்களை நாடுகின்றது என்றும் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பெருந்தோட்டங்களில் பணியாற்றும் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக்கப்படுவதன் காரணம் என்னவென வினவிய அவர், ஒன்பது மாத குழந்தைக்கு தாய்ப்பால் தருவதற்கு மலையக தாய்மார்களுக்கு உரிமையில்லையா என்றும் கேள்வியெழுப்பினார்.

ஹாலி எல றொசட் தோட்டத்தில் பொலிஸாராலும் முகாமைத்துவ அதிகாரியாலும் பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட கனகரத்தினத்துக்கு நியாயம் பெற்றுத் தரப்பட வேண்டும் எனக் கேட்ட வடிவேல் சுரேஸ், பெருந்தோட்ட நிர்வாகங்கள் மிகவும் கீழ்த்தரமான, மனிதாபிமானம் மற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. மலையக பெருந்தோட்டங்களில் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், திருடர்கள் இவர்களுக்கு எதிராக கடுமையாக்கப்பட வேண்டிய சட்டங்கள், அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக கையில் எடுக்கப்படுகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படும் வகையிலான சம்பவங்கள் இனிமேலும் நடக்குமாயின், மனித உரிமை ஆணைக்குழு அல்லது ஜெனீவா சென்வேன். அங்கு சென்று எமது மலையக மக்களின் உரிமைகளை மீட்டேடுப்பேன் என்று சவால்விட்ட அவர், பெருந்தோட்ட மலையக மக்கள் தேசிய இனமாக அங்கிகரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிநின்றார்.



# மின்சாரம் தாக்கி உயிரிழந்த தொழிலாளிக்கு நட்டஈடு

**ஆ.ரமேஸ்.**

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட டயகம கிழக்கு 03ஆம் பிரிவு தோட்டத்தில் மின்சாரம் தாக்கி பலியான தோட்டத் தொழிலாளியும், மூன்று பிள்ளைகளின் தந்தையுமாகிய இராமகிருஷ்ணனுக்கு அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிர்வாகம் நட்டஈடாக 45 இலட்சம் ரூபாயும் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்ல காணி ஒன்றும் வழங்க இணங்கியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட குழுவின் உறுப்பினர்களான காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், காங்கிரஸ் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஸ்வரன், சட்டத்தரணி தங்கவேல் உள்ளிட்ட குழுவினருக்கும், அக்கரப்பத்தனை பெருந் தோட்ட முகாமைத்துவ கம்பணியினருக்கும் இடையில் கொழும்பு தொழில் அமைச்சில் நேற்று (08) இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இ.தொ.கா உயர்மட்டம் தெரிவித்தது.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த தொழிலாளிக்கு வயது 45 ஆகும். குறித்த தொழிலாளி, தொழிற்சாலை உத்தியோகத்தரின் பணிப்பின் பேரில், அவரின் வசிப்பிடம் அமைந்துள்ள இடத்துக்கு உரிய விவசாய தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

இதன்போது அங்கு விவசாய தோட்டத்தில் பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாப்புக்கு பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியிலிருந்து பாய்ந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

# வக்ப் சபை அனுமதி

**ஏ.எம்.ஜலீல்**

நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் நிர்வாக காலம் காலாவதியாகி இருக்குமாயின் அதற்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிப்பதற்கான அனுமதியை வக்ப் சபை வழங்கியுள்ளது.

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தங்களது வக்ப் சட்ட யாப்பு மற்றும் கடந்தகால நடைமுறைக்கு இணங்கவும் தெரிவுகள் தொடர்பாக திணைக்கள நடைமுறைகளைப் பின்பற்றி புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்களைத் தெரிவுசெய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அதற்கான அறிவுறுத்தல்களை கலாசார திணைக்கள பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் விடுத்துள்ளார்.



# வாருங்கள் வாசியுங்கள்

**சுதத் எச்.எம்.ஹேவா**

வாசிப்பு மாதத்துக்கு சமாந்தரமாக ஹட்டன் நகர சபையின் ஊடாக வாசகர்களுக்காக சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் புத்தகங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஹட்டன் வாசிகசாலை கேட்போர் கூட்டத்திலேயே இவை இடம்பெறுகின்றன. பிரதேசத்தின் வாசிப்பாளர்கள் மற்றும் மாணவர்களை கருத்தில் கொண்டே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹட்டன்-டிக்கோயா நகரசபை தவிசாளர் சடயன் பாலச்சந்திரனால் இந்தப் புத்தகக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



# காட்டாறில் சிக்கி மரணம்

**பாலித ஆரியவங்ச**

பதுளைஓயா அந்தனிய இன்னேபொக்க பாலத்துக்கு அருகில் மிதந்துகொண்டு வந்த ஆணின் சடலம் நேற்று (08) மீட்கப்பட்டுள்ளது.

காட்டாறில் சிக்கி இழுத்துவரப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார், சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# பரிசளிப்பு விழா



பிபிலை ஸ்ரீ வாணி தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் எம். சந்திரகுமார் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில், பிரதம அதிதியாக பிபிலை வலயக் கல்வி பணிப்பாளர் கே.ஜே. சுனில் விஜேதிலக்க கலந்து கொண்டார்.

(நடராஜா மலர்வேந்தன்)



# போய் சேருவதற்கு வழி தெரியவில்லை

**சுதத் எச்.எம்.ஹேவா**

ஹட்டன், குடாகம பொது மயானமும் அதற்குச் செல்லும் வழிகளும் புற்களால் நிரம்பி, வழியே தெரியாமல் மூடப்பட்டுள்ளன. அடக்கம் செய்வதற்காக சடலங்களை எடுத்துச் செல்வோர் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

வெயில் காலங்களில் ஓரளவுக்கு சமாளித்து தட்டுத்தடுமாறி சென்றுவிடலாம். எனினும், மழை நேரங்களில் பெரும் சிரமங்களுக்கு தாங்கள் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

> **வெயில் காலங்களில் ஓரளவுக்கு சமாளித்து தட்டுத்தடுமாறி சென்றுவிடலாம். எனினும், மழை நேரங்களில் பெரும் சிரமங்களுக்கு தாங்கள் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**
> **பாம்புகள், விசஜந்துகள், அட்டை உள்ளிட்டவையால் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று மயானத்துக்குச் சென்றுதிரும்புவோர் தெரிவிக்கின்றனர்**

பாம்புகள், விசஜந்துகள், அட்டை உள்ளிட்டவையால் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று மயானத்துக்குச் சென்றுதிரும்புவோர் தெரிவிக்கின்றனர்.

இந்த மாயானத்துக்கும் அதற்குச் செல்லும் வழிகளும் பலவருடங்களாக இவ்வாறு புல், பூண்டுகள் முளைத்து காணப்படுகின்றன என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# வேடுவர்களின் அருங்காட்சியகம் சேதம்

மஹியங்கனை, தம்பானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வேடுவர்களின் அருங்காட்சியம் மழையால் சேதமடைந்துள்ளது.

அருங்காட்சியகத்துக்குள் மழைநீர் புகுந்துள்ளது. இதனால், அருங்காட்சியகத்தை பார்வையிட வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், நம் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழங்கால பூர்வகுடிகளின் 9 மண்டை ஓடுகளும், அவற்றில் இரண்டு உடல்களின் எலும்புகளும் ஸ்கொட்லாந்தில் உள்ள எடிமாப்ரோ பல்கலைக்கழகத்தில் 250 முதல் 300 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்தன.

இவை, பூர்வகுடிகளின் தலைவரான



ஊருவரிகே வன்னியல எத்தோனிடம் 2019 இல் ஒப்படைக்கப்பட்டன. அவை இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.



# தொங்கும் குளவி கூடுகளால் ஆபத்து

## அப்புறப்படுத்துமாறு கோரிக்கை

**பி.கேதீஸ்**

தலவாக்கலை பஸ் நிலைய கட்டடத்தில் காணப்படும் குளவிக் கூடுகளால் பயணிகளும் பிரதேச மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பஸ் நிலையத்தில் பல இடங்களில் பெரிய பெரிய குளவிக் கூடுகள் காணப்படுவதுடன், இந்தக் குளவிக் கூடுகளைச் சுற்றி காகங்கள் மற்றும் புறாக்கள் சுற்றித்திரிவதால் எந்த நேரத்திலும் இந்தக் குளவிக் கூடுகள் கலைவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் மற்றும் அருகிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு வருவோர் எனப் பலரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, குளவிக்கூடுகளை விரைவில் அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# சிவனொளிபாத யாத்திரை டிசெம்பரில் ஆரம்பம்

**எம்.கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஷ**

2022-2023 பருவ கால ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரை, டிசெம்பர் மாத பூரணை தினத்துடன் ஆரம்பமாகும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் முன்னெடுக்கப்படுகின்றன என சிவனொளிபாத மலையின் தலைமை தேரர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவின் தலைமையில், நல்லத்தண்ணி கிராமசேவகர் காரியாலயத்தில் நேற்று (08) நடைபெற்ற கூட்டத்திலேயே தலைமை தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> **சிவனொளிபாதமலை யாத்திரை, டிசெம்பர் மாத பூரணை தினத்துடன் ஆரம்பமாகும். யாத்திரிகர்களுக்கான சேவைகள், பொது வசதிகள், அரச, தனியார் பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும்**

சிவனொளிபாத மலைக்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்கான சேவைகள், பொது வசதிகள், அரச, தனியார் பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும்.



# தமிழ்நாட்டு மலையக தமிழர்களை பாதுகாப்பேன்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் புலம்பெயர்ந்து TANTEA தோட்டங்களில் வசிக்கும் மலையக தமிழர்கள் தற்போது எதிர்க்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுடன் தமிழ்நாட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெயசீலன் கலந்துரையாடினார்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய தார்மிகக் கடமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு உண்டு.

அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க தமிழக அரசு மற்றும் இந்திய அரசுடன் கலந்துரையாடுவதாக இதன்போது இ.தொ.காவின் தலைவர், அவரிடம் உறுதியளித்துள்ளார்.

# திறமைகள் இருந்தால் மட்டுமே போதாது ஒழுக்கம் முக்கியம்

ஆசியக் கிண்ணத்தை சுவீகரித்து நாட்டுக்கு பெருமை சேர்த்த இலங்கை அணிக்கே, அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபதுக்கு-20 ஆண்களுக்கான உலகக்கிண்ணப் போட்டியில், அதிகம் வாய்ப்புகள் இருப்பதாக கணிக்கப்பட்டாலும் இடைநடுவில் தோற்றுப்போய் வீசிய கையும் வெறும் கையுமாக நாடு திரும்பியுள்ளது.

எனினும், இலங்கை திரும்பிப்பார்க்கும் வகையில், அணியின் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகள் சிட்னி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

உலகக் கிண்ணத்தை இலங்கை கிரிக்கெட் அணி 1996 இல் சுவீகரித்ததன் ஊடாக, ஒரு சிறிய தீவின் சாதனையை முழு உலகமுமே திரும்பி பார்த்தது.

ஓர் அணிக்குள் ஒற்றுமை, குழுவாக அர்ப்பணித்தல், ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியன திறமைக்கு அப்பால் முன்னிற்க வேண்டிய பொதுவான குணாம்சங்களாகக் கணிக்கப்படுகின்றன. அப்படியானால் மட்டுமே, போட்டிகளில் வெற்றியீட்டமுடியும்; இரசிகர் மனங்களையும் வெல்லமுடியும்.

தனுஷ்கவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டுக்கு அப்பால், போட்டியைக் காட்டிக்கொடுத்த குற்றச்சாட்டும் உள்ளது. எந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவுதான் திறமை ஒருவரிடம் இருந்தாலும், ஒழுக்கம் இல்லையேல், திறமையெல்லாம் இரண்டாம் பட்சமாகிவிடும்.

இலங்கை கிரிக்கெட் அணிக்குள் நுழைந்துவிடவேண்டுமென துடித்துடிப்புடன் பலரும் விளையாடிக் கொண்டிருக்கையில், கிடைத்த சந்தர்ப்பத்தை கைநழுவ விட்டுவிட்டார் தனுஷ்க; திறமையான வீரர் என்றாலும், 11 பேர் அடங்கிய அணிக்குள் இனிமேலும் அவரை சேர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

சர்வதேச ரீதியில் இடம்பெறும் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களின் ஒழுக்கம் என்பது, அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் நாட்டினதும் மக்களினதும் ஒழுக்கமாகும் என்பதை ஒவ்வொரு வீரரும் நினைவில் வைத்திருக்கவே வேண்டும். வீசப்படும் ஒவ்வொரு பந்தையும் விளாசித் தள்ளும்போதும், பிடி எடுக்கும் போதெல்லாம் கை தட்டி ஆரவாரம் செய்த, கிரிக்கெட் இரசிகர்கள், கைகட்டி இலங்கையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு, தனுஷ்கவுக்கு எதிராக முதன்முறையாக முன்வைக்கப்பட்டது அல்ல; தென்னாபிரிக்காவில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டியில், நோர்வே நாட்டு யுவதியை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டு அவருக்கும், அவருடைய நண்பருக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டிருந்தது.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியின் போது, பயணப் பாதுகாப்பு வளைய முறையை (Bio - bubbles) உடைத்துக்கொண்டு வெளியேறி, மதுபோதையில் நடுவீதியில் இருந்தார் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. பெண் தொடர்பிலான பிரச்சினையில், மாத்தறையில் இந்த வீரர் மீதே கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பதையும் மறந்துவிடக்கூடாது.

உணர்வுரீதியாக இதயங்களைக் கவர்ந்திழுக்கும் விளையாட்டுகளில் கிரிக்கெட்டும் ஒன்றாகும். ஆகையால், எதிர்காலத்தையும் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாத வகையிலும் அணியின் வீரர்களை தெரிவு செய்வது இலங்கை கிரிக்கெட்டின் பொறுப்பாகும்.


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் ஆழ்மனதில், தான் ஒரு சுதந்திர புருஷன் என்பதை நிறுத்தினால், அடிமை எண்ணம் பொடிப்பொடியாகிவிடும்.

திறமை, நேர்மை உடையவர்களுக்கு நேரிய சிந்தனைகள் தானாகவே பரிமளிக்கும். சாதி, சமய, மொழி பேதங்களைச் சொல்லியே தகுதி அற்றவர்களும் உயர்நிலைக்கு வர ஆசைப்படுகின்றார்கள்.

அம்பேத்கார் பெரும் கல்வியாளர்; அரசியல் சட்ட வல்லுநர். அவர் சாதியைப் பேசுபவர்களைக் கண்டுகொள்ளாமல், தனது சாதனைகளில் குறியாக இருந்தார். இந்திய அரசியலமைப்பை உருவாக்கினார்.

திறமை இருந்தால், எவரையும் உலகம் ஏற்றுக்கொள்ளும். விரும்பியவாறு படிப்பதற்கு எவருக்கும் உரிமையுண்டு. கௌரவங்கள் ஒருவரின் சாதனைகளில் அடங்கியுள்ளன.

ஒருவர் முன்னேற முடியாது என எண்ணுவதே கோழைத்தனம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சிறைத் தண்டனை ஐந்து வருடம்; சிறையில் 14 வருடங்கள்



எம்.எஸ்.எம் ஐயூப்

பிரிவினைவாத செயல்களில் ஈடுபட்டு கைதுசெய்யப்பட்டு, வழக்கு விசாரணையின் பின்னர் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த எட்டு தமிழ் அரசியல் கைதிகள், தீபாவளி தினமான ஒக்டோபர் 24ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் மூவர், 1999ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டமொன்றின் போது, தற்கொலை குண்டுத் தாக்குதல் மூலம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சியோடு சம்பந்தப்பட்டு, சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

அவர்களை விடுதலை செய்வதற்கு முன்னர், சந்திரிகாவின் ஒப்புதலை நீதி அமைச்சு பெற்றிருந்தது. தாம் எவ்வித தயக்கமுமின்றி அந்த ஒப்புதலை வழங்கியதாக, சந்திரிகாவும் ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

இதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்த காலத்தில், அவரைக் கொலை செய்ய முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கும் இவ்வாறு மன்னிப்பு வழங்கப்பட்டது. மைத்திரியே ஜனாதிபதியாக அந்த மன்னிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே, மேற்படி எண்மரை விடுதலை செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அந்த அறிக்கையில் அதை விட முக்கியமான விடயம் ஒன்று இருந்ததை பலர் கவனித்ததாகத் தெரியவில்லை.

அந்த எண்மரில் நால்வருக்கு, நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை விட, கூடுதலான காலம் சிறையில் இருந்துவிட்டே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பதே அந்த விடயமாகும்.

அந்த அறிக்கையின் பிரகாரம், விடுதலை செய்யப்பட்ட ஒருவருக்கு 11 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அவர் 14 வருடங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்துள்ளார்.

மற்றொருவருக்கு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலும் அவரும் 14 வருடங்கள் சிறையில் இருந்துள்ளார். மேலும், இருவருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர்களும் 14 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளனர்.

இது ஒரு வித்தியாசமான கதையாக இருக்கிறது. நீதிமன்றத்தால் ஒருவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தை பார்க்கிலும் நீண்ட காலம் ஒருவரை சிறையில் வைத்திருக்க முடியுமா? ஆனால், இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பது ஜனாதிபதி செயலகம் என்பதே முக்கியமான விடயமாகும்.

அரசாங்கம் அசௌகரியத்துக்கு உள்ளாகும் வகையிலான பொய்யான தகவல்களை ஜனாதிபதி செயலகம் வெளியிடுமா? அதுவும் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மதிப்பதில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவை குற்றஞ்சாட்டிக் கொண்டு இருக்கும் தருணத்தில், இவ்வாறான பொய்யான தகவலொன்றை ஜனாதிபதி செயலகம் வெளியிடுமா?

ஒருவர், ஒரு குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டதன் பின்னர், அவருக்கு எதிரான வழக்கில் அவருக்கு தண்டனை விதிக்கும் வரை, சிலவேளை சிறையிலேயே அவர் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம். அதன் பின்னர், அவருக்கு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதிக்கலாம். அப்போது, அவருக்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தைப் பார்க்கிலும் அவர் மொத்தமாக சிறையில் இருக்க வேண்டி வரும். இது சாதாரண நடைமுறையாகும்.

இந்தச் சாதாரண நடைமுறைப்படியே மேற்படி நான்கு தமிழ்க் கைதிகளும் அவர்களுக்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தைப் பார்க்கிலும், நீண்ட காலம் சிறையில் இருந்திருந்தால் ஜனாதிபதி செயலகம், அதை ஏன் ஏதோ புதிய விடயம் போல் அறிக்கையில் குறிப்பிட வேண்டும்?

இந்த விடயம் தொடர்பாக, தேசிய சமாதான பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த நால்வரையும் தண்டனைக் காலத்தைப் பார்க்கிலும் நீண்டகாலம் சிறையில் வைத்திருந்தமை, அவர்களது மனித உரிமைகளை மீறிய செயலாகும் என்றும் மிக மோசமான அதிகார துஷ்பிரயோகம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, விடுதலை செய்யப்பட்ட இந்தக் கைதிகள் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாகத் தடுத்து வைத்தமைக்காக, அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் சமாதான பேரவை வலியுறுத்தியுள்ளது. அதாவது சமாதான பேரவையும், இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மேலதிக காலத்தை, விளக்கமறியல் காலமாக கருதவில்லை.

இந்த மேலதிக காலம், விளக்கமறியல் காலமாக இருந்தாலும், அதிலும் சிலருக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டு இருக்கிறது. ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையின்படி, இரண்டு கைதிகளுக்கு நீதிமன்றத்தால் ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர்கள் 14 வருடங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்துள்ளனர்.

இந்த மேலதிக ஒன்பது வருட தடுப்புக் காலம், விளக்கமறியல் காலம் எனக் கருதினாலும், அது அந்தக் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். தண்டனையே ஐந்து வருடம் என்றால், வழக்கு விசாரணைக்கு ஒன்பது வருடங்களை எடுப்பது என்ன நியாயம்?

இது இந்த நால்வருக்கு மட்டும் இழைக்கப்பட்ட அநீதி அல்ல. இதற்கு முன்னர், அதாவது கடந்த வருடம் ஜூன் மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய அப்போதைய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் இந்த விடயத்தை எடுத்துக் காட்டினார். 35 கைதிகள் தமக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தை விட, நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்துள்ளதாகவும், 38 கைதிகளின் வழக்குகள் 20 வருடங்களுக்கு மேலாக மேல்நீதிமன்றங்களில் நீடித்துக் கொண்டு சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒருவர் 20 வருடங்கள் சிறையில் இருந்தவாறே வழக்காடி, மேலும் பல வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தால், அது பாரிய மனித உரிமை மீறல் என்பதை எந்த நீதிபதியும் கருத்தில் கொண்டாரா என்பது சந்தேகமே. அவர் அதைக் கருத்தில் கொண்டாலும், அதற்காக அவரால் சட்டப்படி சிறைத் தண்டனையை குறைக்க முடியுமா என்பதும் சந்தேகமே.

ஒருவர் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் குற்றமற்றவர் என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டால், அந்தத் தடுப்புக் காலம் எவ்வளவு பாரிய கொடுமை? சில மாதங்களுக்கு முன்னர், ஒரு தமிழ் கைதி 12 வருடங்களுக்குப் பின்னர் குற்றமற்றவர் என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு இருந்தார்.

ஒருவர் நியாயமான முறையிலோ அல்லது நியாயமற்ற முறையிலோ சட்டப்படியோ சட்ட விரோதமாகவோ தடுத்து வைக்கப்பட்டால், அவரும் அவரது குடும்பமும் மானசீகமாக வெகுவாக பாதிக்கப்படுவது இயல்பாகும். நீண்ட காலமாக அவ்வாறு ஒருவர் தடுத்து வைக்கப்பட்டால், அவரது பொருளாதாரம், சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி, குடும்ப உறவுகள் ஆகிய அனைத்தும் பாதிக்கப்படும்; சீரழியும்.

அவர் சிறையில் இருந்து விடுதலையானதன் பின்னரே, சிலவேளை அவரால் இவற்றில் சிலவற்றையாவது சீரமைத்து, வாழ்க்கையை புதிதாக கட்டி எழுப்ப முடியும். எனவே, ஒருவர் நியாயமாக கைது செய்யப்பட்டு, சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாலும், அவர் உரிய காலத்தில் விடுதலை செய்யப்படாவிட்டால், அவர் தமது வாழ்க்கையையும் தமது குடும்பத்தினரது வாழ்க்கையையும் மீளக் கட்டி எழுப்பும் காலத்தையே அதிகாரிகள் அவரிடம் பறித்தெடுக்கிறார்கள். ஒருவரது ஆயுளில் இருந்து ஒரு நாளையேனும் இவ்வாறு நியாயமற்ற முறையில் பறித்தெடுக்க, தனி நபர்களுக்கோ அரசுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

ஒருவர் செய்யும் குற்றச் செயலொன்றுக்காக, மற்றொரு நபர் எடுக்கும் பதில் நடவடிக்கை பழிவாங்கலாக அமையலாம். ஆனால், ஓர் அரசின் சட்டத்தின் பிரகாரமான தண்டனை என்பது, சீர்திருத்த வழிமுறையாக அமைய வேண்டுமே தவிர, பழிவாங்கலாக அமைய முடியாது.

கி.மு 1775க்கும் 1750க்கும் இடைப்பட்ட காலத்தில், பபிலோனியாவில் எழுதப்பட்டதாக கருதப்படும் உலகின் முதலாவது சட்டக் கோவையான ‘ஹம்முராபி’ சட்டக் கோவையின்படி, ஒருவர் மற்றொருவரது கண்ணை குருடாக்கினால், அந்த இரண்டாம் நபர், முதல் நபரின் கண்ணைக் குருடாக்க உரிமை பெறுகிறார். ஆனால், தற்கால நாகரிக உலகில், தண்டனை என்பது சீர்திருத்த வழிமுறையாகும்.

ஆனால், ஐந்து வருட சிறைத் தண்டனையைப் பெறுவதற்காக ஒருவர், 14 வருடங்கள் சிறையில் தவிக்க நேர்ந்தால் அல்லது, குற்றமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஒருவர், அதற்கு முன்னர் 12 வருடங்கள் சிறையில் இருக்க நேர்ந்தால், அது சீர்திருத்த நடவடிக்கையாக அமையுமா என்பது சந்தேகமே?

நாமலின் மேற்படி உரையின் போது, அவர் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதைப் போல்தான் கருத்துத் தெரிவித்தார். இன்னமும் அவரது கட்சியே ஆட்சி பீடத்தில் இருக்கிறது. ஆனால் உருப்படியான எதுவும் நடைபெறவில்லை என்பது அவதானத்துக்கு உரியது.

## கடிதங்கள்

### வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை



பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பல்லவராயன் கட்டு ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி, இதுவரை செப்பனிடப்படாததால் போக்குவரத்தின் போது மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதுடன் தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால், போக்குவரத்துகள் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளாக குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதி சுமார் 45 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில், 2020ஆம் ஆண்டில் ‘ஐ றோட்’ திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அதன் புனரமைப்பு பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன. இதனால், கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, இவ்வீதியின் மூன்று இடங்களில், வெள்ள நீர் குறுக்கறுத்து பாய்ந்ததுடன் நீண்டநாள் வீதியில் வெள்ளம் தேங்கி நின்றது. இந்தக் காலப்பகுதியில், போக்குவரத்துகள் உழவு இயந்திரங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, இந்த வீதி ஊடாக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட பல நோயாளிகள், இடைநடுவில் உயிரிழந்ததாகவும் வேரவில் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் சென்று வருவதற்கும் அங்கிருந்து அவசர நோயாளிகளை முழங்காவில் வைத்தியசாலைகோ, கிளிநொச்சி வைத்தியசாலைக்கோ கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எனவே, இந்த வீதியை உடனடியாக புனரமைத்துத் தருமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

– யது பாஸ்கரன்




#225 – சிறுவர் தினத்தில் பாராளுமன்றத்தில் முறையிட

# சிறுவர்கள் ஒன்றுபடுகின்றனர்

வடமாகாணத்திலுள்ள மக்களுக்கும், சிறார்களுக்கும் அன்பைப் பரப்புவதற்காக, சிறுவர் தினத்தைக் கொண்டாடும் வகையில் '*Lama Surakum Yathra*' (சிறுவர் பாதுகாப்பு சுற்றுப்பயணம்) என்பதை *Stop Child Cruelty Trust (SCC)* மற்றும் *Child Protection Alliance (CPA)* ஆகியன ஒன்றிணைந்து மீண்டும் தொடங்கவுள்ளன.

கொழும்பு கோட்டையில் ஆரம்பமாகி, ஒக்டோபர் 1ஆம் திகதி யாழ்ப்பாணத்தையும், ஒக்டோபர் 15ஆம் திகதி கண்டியையும், ஒக்டோபர் 29ஆம் திகதி மட்டக்களப்பையும் சென்றடைந்தது. நவம்பர் 12ஆம் திகதி அநுராதபுரத்தையும் சென்றடையும்.

2022, நவம்பர் 18 அன்று, *#NOguti* மற்றும் இலங்கையின் முதல் சிறுவர் மாநாட்டிற்கு ஆதரவான *Yathra* நடைபவனியுடன், கொழும்பில் உள்ள விஹார மஹா தேவி பூங்காவில் உள்ள திறந்தவெளி அரங்கில் சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்காக நடைபவனியின் மாபெரும் இறுதி நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

**தலைவர், வைத்தியர் துஷ் விக்கிரமநாயக்க**

இந்த முயற்சி தொடர்பில் கருத்து வெளியிட்ட *SCC* இன் ஸ்தாபக தலைவரான வைத்தியர் துஷ் விக்கிரமநாயக்க, "எமது சிறாருக்கு ஒரு சிறந்த நாட்டை வலியுறுத்தி பலர் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்தாலும், அவர்கள் நம் நாட்டிற்கு சிறந்த, புண்படாத சிறுவர்களை வளர்ப்பதில் அமைதி பேணியுள்ளனர். *Yathra* நடைபவனி என்பது சிறாரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அன்பின் பயணம். ஒவ்வொரு முக்கிய நகரத்திலும், சிறாருக்கான செயற்பாடுகள் ஒரு தினம் முழுவதும் முன்னெடுக்கப்படும்.

> **இலங்கையில் சிறாரின் பாதுகாப்பு நெருக்கடி தீவிரமடைந்து வருகிறது. 2020 ஜூலை முதல் 2022 ஜூலை வரை, பதினாறு சிறார்கள் உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் கொலை செய்யப்பட்டுள்ளனர்**

அவர்களை உரிமைகள் உடையவர்களாகவும், சமத்துவமான பிரஜைகளாகவும் வலுவூட்டுதல், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சிறாருக்கு அத்தியாவசிய கல்விப் பொருட்கள் மற்றும் சுகாதார அணையாடைகளை விநியோகம் செய்தல் மற்றும் சமூக சமையலறை (community kitchen) மூலம் பசியால் வாடுபவர்களுக்கு உணவளித்தல் ஆகியவற்றில் இது கவனம் செலுத்துகிறது" என்று தெரிவித்தார்.

நாம் எதிர்பார்க்கும் நீதியும் அமைதியுமான நாட்டை நிறுவுவதற்கான அழுத்தமான தேவை உள்ளது என்பதை




நினைவூட்டுகிறது. மகிழ்ச்சியான மற்றும் பாதுகாப்பான கல்வியை ஊக்குவிக்கும் வகையில் *Yathra* நடைபவனியில் நாம் செல்லும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு முன்னுதாரண அடையாள பாடசாலையை அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம் என்று வைத்தியர் விக்கிரமநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

> **225 பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறாரின் பாதுகாப்பை தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் மையமாகச் சேர்க்க வேண்டும்**

**பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவ**

"2017ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் நடத்தப்பட்ட பாடசாலை ஒழுக்காற்று முறைகள் குறித்த ஆய்வில், 80% மாணவர்கள் கடந்த பாடசாலைத் தவணையில் உடல் ரீதியான தண்டனையை அனுபவித்ததாகக் கூறியுள்ளனர். கடந்த தசாப்தத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு புகாரளிக்கப்பட்ட கொடுமைப்படுத்தல் வழக்குகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.

இலங்கையின் உயர் நீதிமன்றம் 2021 பெப்ரவரியில் சிறுவர்களுக்கான உடல் ரீதியான தண்டனையை சந்தேகத்திற்கு இடமின்றி தடைசெய்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பை வழங்கியது. மேலும், இலங்கை அரசாங்கம் எமது சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக இந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசரமானது" என முன்னாள் இலங்கை மனித உரிமைகள் ஆணையாளரும், ஜமைக்கா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்ட பீடாதிபதியும், பேராசிரியருமான பிரதிபா மஹாநாமஹேவ கருத்து தெரிவித்தார்.

**சாரங்க திசசேகர**

"எங்கள் பாடசாலைகள் பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும். அங்கு சிறுவர்களும் கல்வி போதிப்பவர்களும் பாடசாலைக்குள் மற்றும் சமூகத்தில் வன்முறைகளைத் தடுக்கக்கூடிய சமூக சார்பு நடத்தைகளைக் கடைப்பிடிக்க முடியும். இருப்பினும், ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் மாற்றுத் தண்டனை முறைகள் பற்றி அறிந்திருக்கவில்லை என்றால், பிரச்சினை தொடர்ந்தும் இருக்கும். தலைமுறை தலைமுறையாக இந்தக் கொடூரமான குற்றத்தை சாதாரணமாக்குவதற்கு நிபந்தனை

**சிறுவர் பாதுகாப்பு என்பது ஒரு கூட்டு சமூகப் பொறுப்பாகும். SCC பொது விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் இது தொடர்பில் வாதிடுவதற்கான தனது கூட்டு முயற்சிகளைத் தொடரும். இப்பணியில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் w stopchildcruelty.com என்ற இணையதளத்தையும் w facebook.com/stopchildcruelty என்ற முகநூல் பக்கத்தையும் பார்வையிடலாம் அல்லது info@stopchildcruelty.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ள முடியும்.**

விதிக்கப்படும். இந்த நடத்தையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட *Scc* இன் *#NOguti* பிரசாரத்தில் அங்கம் வகிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று நடிகரும், சிறுவர் பாதுகாப்புத் தூதுவருமான சாரங்க திசசேகர குறிப்பிட்டுள்ளார்.

**பிரியந்த ஜெயக்கொடி**

"பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட அல்லது சந்தேக நபரின் தனியுரிமையைப் பற்றி கவலைப்படுவதில்லை. பிரஜைகளின் தலையீடு எதுவாக இருந்தாலும், அவர்களின் அடிப்படை உரிமைகள் விடயத்தில் சரியான அணுகுமுறை பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வது பொலிஸார் மற்றும் ஊடகங்களின் பொறுப்பாகும். சிறுவர்களின் உரிமைகள் எப்போதும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். எனவே, இந்த விடயத்தில் வலுவான நெறிமுறைகள் குறித்து பொலிஸார் மற்றும் ஊடகங்கள் இரண்டிற்கும் அறிவூட்டும் வகையில் நீண்ட காலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுவது அவசியம் என்று நான் நம்புகிறேன்" சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பொலிஸாரின் பிரதிபலிப்பு குறித்துப் பேசிய ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரான பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

> **சிறுவர்கள் அச்சத்துடன், பதற்றத்துடன் உள்ளதுடன், பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழலைப் போக்கும் வகையில் சிறுவர் பாதுகாப்பு நமது தேசிய பாதுகாப்பின் மையமாக இருக்க வேண்டும்**

**நிரஞ்சனி சண்முகராஜா**

இந்நிகழ்ச்சியில் நடிகையும், சிறுவர் பாதுகாப்புத் தூதுவருமான நிரஞ்சனி சண்முகராஜா கருத்து வெளியிடுகையில், "அன்பும் ஆதரவும் இல்லாத சிறுவர்களிடம், பிறரைக் கவனிக்கும் மனப்பான்மையோ, பிறரிடம் அன்பு செலுத்தும் மனப்பான்மையோ வளராது. அன்பைக் கொடுத்து அவர்களை வளர்ப்போம்; அன்பினால் சிறுவர்களின் உலகத்தை மாற்றுவோம்" என்று குறிப்பிட்டார்.

---

அஸாம்

## ஜீன்ஸ், லெகின்ஸ் அணியத் தடை

அரச ஊழியர்கள் அனைவருக்கும் ஆடைக் கட்டுப்பாடு விதித்து அஸாம் அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அஸாம் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'அலுவலக நேரத்தில் அரச ஊழியர்கள் கட்டாயமாக பாரம்பரிய உடைகளை முறையாக அணிய வேண்டும். ஆண்கள் சட்டை மற்றும் நீளக் காட்சட்டையும், பெண்கள் புடவை மற்றும் சல்வார்-கமீஸ் ஆடைகளையும் அணியலாம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலும் ஒவ்வொரு புதன்கிழமையும் ஊழியர்கள் பாரம்பரிய ஆடைகளை அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஜீன்ஸ் மற்றும் லெகின்ஸ் அணியவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது ஊழியர்களுக்கு சீருடையும் வழங்கப்படவுள்ளதாகவும் சட்டப்பேரவை நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஊடகவியலாளர்களும் இனி அரசாங்க வழிகாட்டுதலின் படிதான் ஆடைகளை அணிய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ்அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்கத் தவறும் ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## காலணிகளில் காந்தி; உள்ளாடைகளில் சாமி

காலணிகளில் மகாத்மா காந்தி படத்தையும் உள்ளாடைகளில் கடவுள் படங்களையும் அச்சிட்டு விற்பனை செய்யும் 'அமேசான்' உள்ளிட்ட ஒன்லைன் வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில், மத்திய, மாநில அரசுகள் நான்கு வாரங்களில் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், மதுரையைச் சேர்ந்த முத்துகுமார் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், 'அமேசான் உள்ளிட்ட ஒன்லைன் வர்த்தக நிறுவனங்கள், செருப்புகள், உள்ளாடைகளில் மகாத்மா காந்தி மற்றும் கடவுள் புகைப்படங்களை அச்சிட்டு விற்பனை செய்து வருகின்றன.

சர்வதேச ஒன்லைன் வர்த்தக நிறுவனங்களின் இச்செயல்பாடு இந்திய உள்விவகாரங்களில் தலையிடும் வகையில் உள்ளது. அத்துடன் இது மக்களின் மத நம்பிக்கைகளை புண்படுத்தும் வகையிலும் உள்ளது.



எனவே இந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரி மத்திய-மாநில அரசுகளுக்கு மனு அனுப்பியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், இம்மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் 4 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

பெங்களூர்

## காங்கிரஸ் டுவிட்டர் கணக்கை முடக்க உத்தரவு

காங்கிரஸ் மற்றும் பாரத் ஜோடா யாத்திரை டுவிட்டர் கணக்குகளை முடக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, 'இந்திய ஒற்றுமை பயணம்' என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றார்.

ராகுல்காந்தி தலைமையிலான இந்தப் பாதயாத்திரை தற்போது தெலுங்காவில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, ராகுல்காந்தி மேற்கொண்டு வரும் இப்பாதயாத்திரை தொடர்பான வீடியோ, புகைப்படங்கள், கருத்துகளை வெளியிட 'பாரத் ஜோடோ யாத்திரை' என்ற பெயரில் தனியே டுவிட்டர் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் குறித்த டுவிட்டர் பக்கங்களில் வீடியோ ஒன்று வெளியிடப்பட்டது.

அதில், கே.ஜி.எப். 2 திரைப்பட பாடலின் இசை பயன்படுத்தப்பட்டது. ஆனால், கே.ஜி.எப். 2 பட பாடலின் இசைக்கான காப்புரிமையை எம். ஆர்.டி. இசை நிறுவனம் பெற்றுள்ளது.

இதனையடுத்து, இப்பாடலுக்கு நாங்கள்



காப்புரிமை பெற்றுள்ள நிலையில் எங்களிடம் முன் அனுமதி பெறாமல் கே.ஜி.எப் 2 பட பாடலின் இசையை காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியதாகவும், அது தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு எம்.ஆர்.டி. இசை நிறுவனம் பெங்களூர் பொலிஸில் புகார் அளித்தது.

இப் புகார் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக பெங்களூர் வணிக நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணை நடைபெற்றது. அப்போது, காப்புரிமை பெற்றுள்ள நிறுவனத்திடமிருந்து அனுமதி பெறாமல் அவர்களின் பாடலின் இசையை பயன்படுத்தியதற்காக காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கு, பாரத் ஜோடோ யாத்திரையின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கை தற்காலிகமாக முடக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ராஜஸ்தான்

## கிணற்றில் தண்ணீர் எடுத்ததால் குடும்பஸ்தர் கொலை



ஜோத்பூர் மாவட்டத்தின் சூர்சாகர் பகுதியைச் சேர்ந்தவர் கிஷன்லால் பீல்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அப்பகுதியிலுள்ள பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்காகச் சென்றுள்ளார்.

இந்நிலையில் கிஷன்லால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கூறி அங்கிருந்த சிலர் அவரை தாக்கியுள்ளனர். இதனையடுத்து படுகாயமடைந்த கிஷன்லாலை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து செல்ல அவரது குடும்பத்தினர் முயன்ற போதும் அதனையும் அவர்கள் தடுத்துள்ளனர்.

இந்நிலையில், தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் கிஷன்லாலை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி கிஷன் லால் உயிரிழந்தார். இதைத்தொடர்ந்து, கிஷன்லாலின் குடும்பத்தினர் மற்றும் அவர் சார்ந்த சமூகத்தினர் இறுதிச்சடங்கு நடத்துவதைப் புறக்கணித்து, இச்சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கைதுசெய்யக்கோரியும், உரிய இழப்பீடு மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கக்கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜப்பான்

## ஜப்பானில் அணிவகுத்த இந்தியக் கப்பல்கள்

ஜப்பானின் யோகோசுகா கடற்பகுதியில் 'IFR-2022' என்ற சர்வதேச கடற்படை அணிவகுப்பு அண்மையில் நடைபெற்றது.

இவ்அணிவகுப்பில் இந்திய கடற்படையை சேர்ந்த ஷிவாலிக் மற்றும் கமோர்டா கப்பல்கள் பங்கேற்றன.

அத்துடன், இந்திய கடற்படையை சேர்ந்த இசைக்குழுவினர் மற்றும் அணிவகுப்பு குழுவினரும் பங்கேற்றனர்.



கேரளா

## தலைமுடி உதிர்வால் உயிரை மாய்த்த இளைஞர்

தலைமுடி உதிர்ந்ததால் இளைஞர் ஒருவர் தனது உயிரை மாய்த்த சம்பம் கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

கேரளா மாநிலம், கோழிக்கோடை சேர்ந்தவர் 29 வயதான பிரசாந்த். இவர், 2014 ஆம் ஆண்டு முதல் இதற்கான சிகிச்சைகளை எடுத்து வந்துள்ளார். எனினும் அவருக்கு தலைமுடி உதிர்வுப் பிரச்சினை நிற்கவில்லை. இதன் காரணமாக அவரது திருமணத்துக்கு பெண் பார்க்கும் திட்டமும் முடங்கியது. இதனால் மிகுந்த மனஉளைச்சலுக்குள்ளான அவர் அண்மையில் தனது அறையில் தூக்கிட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டார். மேலும்,தனது தற்கொலைக்கும், தலைமுடி பிரச்சினைக்கும் மருத்துவம் பார்த்த மருத்துவர் தான் காரணம் எனவும் கடிதம் எழுதி வைத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், சிட்னியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்தும், பாகிஸ்தானும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் நோக்கும்போது நியூசிலாந்தே அதிகம் வாய்ப்புள்ள அணியாகக் கருதப்படுகிறது. எனினும் பாகிஸ்தானும் பெரிய போட்டிகளில் சாதிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது. இரண்டு அணிகளுக்குமிடையிலான 28 போட்டிகளில் 17 போட்டிகளில் பாகிஸ்தானே வென்றதுடன், இருபதுக்கு-20 உலகக் கிண்ணப் போட்டிகள் ஆறிலும் நான்கிலும் பாகிஸ்தானே வென்றுள்ளன.

இரண்டு அணிகளுக்குமிடையிலான சர்வதேச கிரிக்கெட் சபையின் ஆறு அரையிறுதிப் போட்டிகளில் மூன்றில் பாகிஸ்தானும், நியூசிலாந்தில் இரண்டும் வென்றுள்ளன.



நியூசிலாந்தைப் பொறுத்த வரையில் பின் அலென், கிளென் பிலிப்ஸ், இஷ் சோதி ஆகியோர் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்ற நிலையில், பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹரிஸ் றாஃப், ஷடாப் கான், மொஹமட் ஹரிஸ், மொஹமட் றிஸ்வான் ஆகியோர் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

சிட்னியில் இதுவரையில் இத்தொடரில் நடந்த போட்டிகளில் ஒரு போட்டியைத் தவிர ஏனைய போட்டிகள் அனைத்திலும் முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய அணியே வென்ற நிலையில் முதலாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணியே வெல்வதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. இரண்டாவது அணி துடுப்பெடுத்தாடும்போது பந்து சுழல அதிக சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.





### பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கபடி போட்டியில்

# சம்பியனான நிந்தவூர் அல்-மதீனா வித்தியாலயம்

எம்.என்.எம். அப்ராஸ்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது பிரிவினருக்குட்பட்ட ஆண்களுக்கான தேசிய மட்ட கபடி போட்டியில் நிந்தவூர் அல் மதீனா தேசிய பாடசாலை சம்பியனானதாக பாடசாலை அதிபர் நிகார்தீன் தெரிவித்தார்.

கல்முனை கல்வி வலயத்திலுள்ள நிந்தவூர் அல்-அஷ்ரக், அல்-மதீனா தேசிய பாடசாலைகளினது 17 வயது பிரிவினருக்குட்பட்ட கபடி அணிகள் கேகாலை உள்ளக அரங்கில் நடைபெற்ற அரையிறுதி போட்டியில் வெவ்வேறு அணிகளுடன் எதிர்த்தாடி வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப்போட்டிற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவ்விரு அணிகளுக்கிடையிலும் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பங்கு பற்றிய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை அணி இரண்டாமிடம் பெற்றமை மூலம் கல்முனை கல்வி வலயம் உடபட நிந்தவூர் பிரதேசம் பெருமையடைகிறது என அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூர் தெரிவித்தார்.

### உலகக் கிண்ணம்:

# பிரேஸில் குழாமில் பெர்மினோ இல்லை

இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கான பிரேஸில் குழாமில் முன்களவீரரான றொபேர்ட்டோ பெர்மினோ இடம்பெறவில்லை.

பிரேஸிலின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் டிடே, 26 பேர் கொண்ட குழாமை நேற்று முன்தினம் அறிவித்த நிலையில் 39 வயதான பின்களவீரரான டனி அல்விஸ் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, நெய்மர், வின்ஷியஸ் ஜூனியர், றபின்ஹா உள்ளிட்ட ஒன்பது முன்களவீரர்கள் குழாமில் இடம்பெற்றுள்ளனர். கப்ரியல் ஜெஸூஸ், கப்ரியல் மார்டினெல்லி, றிஷலிஷன், லூகாஸ் பக்கெட்டா, அந்தோனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், பிலிப் கோச்சினியோவும் குழாமில் இடம்பெறவில்லை. கடந்த வாரம் இவர் காயமடைந்திருந்தார்.



குழாம்: அலிஸன், எடெர்சன், வெவர்டன், பிரமர், ஈடர் மில்லிடாவோ, மார்க்குய்ன்ஹாஸ், தியாகோ சில்வா, டனிலோ, டனி டல்விஸ், அலெக்ஸ் ஸான்ட்றோ, அலெக்ஸ் டெலஸ், புரூனோ குய்மரெஸ், கஸெமீரோ, எவெர்டன் றிபெய்ரோ, பபின்யோ, பிரட், லூகாஸ் பகெட்டா, அந்தனி, கப்ரியல் ஜெஸூஸ், கப்ரியல் மார்டினெல்லி, நெய்மர், பெட்ரோ, றபின்ஹா, றிஷலிஷன், றொட்றிகோ, வின்ஷியஷ் ஜூனியர்

சீனா

# வாழைப்பழம் உட்கொள்ளக் கட்டுப்பாடு



சீனாவில் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது.

இதன் காரணமாக சீனாவில் கடுமையான கட்டுப்பாடுகள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பொது போக்குவரத்துக்களில் உணவருந்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் விதமாக சீனாவின் ஹூபே மாகாணத்தை சேர்ந்த பெண் ஒருவர் அண்மையில் ரயிலில், பொலித்தீன் உறையொன்றால் தன்னை மூடிக்கொண்டு, வாழைப்பழம் உட்கொண்டுள்ளார்.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த சக பயணியொருவர் இது குறித்து இணையத்தில் பதிவேற்றியதைத் தொடர்ந்து குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

சமீபத்தில், கொரோனா கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாக ஷாங்காய் நகரில் உள்ள டிஸ்னிலேண்டின் வாயில்களை சீனா மூடியுள்ளது.

இதனால், பார்வையாளர்கள் பலரும் உள்ளே சிக்கியுள்ளனர். அதாவது, டிஸ்னிலேண்டில் 10 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்ட நிலையில், அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

இதனால், உள்ளே இருப்பவர்களுக்கு கொரோனா இல்லை என பரிசோதனை செய்து உறுதியான பின்னரே விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




அவுஸ்திரேலியா

# பூமிக்கடியில் ஆடம்பரக் கிராமம்

தெற்கு அவுஸ்திரேலியாவில் 'கூப்பர் லேடி' என்ற கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமமானது சுரங்கப்பாதையில் உள்ளமையே இதன் சிறப்பாகும்

இச்சுரங்கப்பாதையில் 1500 வீடுகள் காணப்படுவதுடன் அதில் 3500-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதி ஒரு காலத்தில் பாலைவனமாக இருந்ததாகவும் அங்கு தட்பவெப்ப நிலை சீராக இல்லாததால் மக்கள் வாழ்வதற்கு ஏற்றவகையில் சுரங்கப்பாதையொன்று அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்தவகையில் கடந்த 1915ஆம் ஆண்டு சுரங்கப்பாதை பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அங்கு அதிகளவிலான மக்கள் வசிக்க ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சுரங்கப்பாதை கிராமத்தில் இணையதள வசதி, வணிக வளாகங்கள், தேவாலயங்கள், திரையரங்குகள், அருங்காட்சியகம், பார் மற்றும் ஹோட்டல்கள் என அனைத்து விதமான வசதிகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல ஹொலிவூட் திரைப் படங்களும் இச் சுரங்கப்பாதை கிராமத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



டுபாய்

# 35 மாடி கட்டடத்தில் தீ விபத்து

டுபாயில் உள்ள உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா அருகேயுள்ள எமார் பவுல்வார்டு வாக் என்ற பிரமாண்ட 35 மாடி கட்டடத்தில் தீ பரவிய காட்சி இணையத்தில் வைரலாகி வருகின்றது.

நள்ளிரவில் பற்றிய தீ, மளமளவென கட்டடத்தின் மேல் பகுதி நோக்கி பரவத்தொடங்கியது.

இதனால் அப் பகுதி முழுவதும் கரும்புகை எழும்பியது. விபத்து குறித்து தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அதிகாலை 4.00 மணியளவில் தீ முழுவதுமாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் நிலையில், இத்தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

நெதர்லாந்து

# விமானங்களை மறித்து போராட்டம்



100க்கும் மேற்பட்டவர்கள் புறப்படுவதற்கு தயாராக இருந்த விமானங்கள் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் நெதர்லாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்நாட்டில் விமான போக்குவரத்தால் ஏற்படும் மாசுபாட்டை கண்டித்தே "குறைவான விமானங்கள், அதிக ரயில்கள் "என்னும் தலைப்பிலேயே சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள விமான நிலையத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் விமானங்கள் முன்பு அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பல தனியார் விமானங்கள் புறப்படுவதை அவர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது நெதர்லாந்தில் கார்பன் டை ஒக்சைடு வெளியேற்றத்தின் மிகப்பெரிய ஆதாரமாக ஷிபோல் விமான நிலையம் இருப்பதாக போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அத்துடன் குறுகிய தூர விமானங்கள் மற்றும் தனியார் ஜெட் விமானங்களுக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இதனை அடுத்து விமான நிலைய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



துருக்கி

# உலகின் உயரமான பெண்ணின் முதல் விமானப் பயணம்

உலகின் உயரமான பெண்ணாக அறியப்படும் துருக்கியைச் சேர்ந்த 'ருமேசா கெல்கி' அண்மையில் முதல் முறையாக விமானத்தில் பயணம் செய்துள்ளார்.

25 வயதான இவரின் உயரம் 7 அடி 7 அங்குலம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது உயரம் காரணமாக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதை தவிர்த்து வந்துள்ளார்.

இந்நிலையில், துருக்கியை சேர்ந்த விமான நிறுவனமொன்று ருமேசா கெல்கிக்காக தங்களது விமானத்தில் மாற்றம் செய்து ஆறு இருக்கைகள் இருந்த இடத்தில் படுக்கை ஒன்றை அமைத்து ருமேசா கெல்கியை விமானத்தில் பயணம் செய்ய உதவியுள்ளது.

இதன் மூலம், 13 நேர பயணத்திற்குப் பிறகு துருக்கியிலிருந்து அமெரிக்காவுக்கு ருமேசா கெல்கி சென்றடைந்துள்ளார்.

இது குறித்து ருமேசா கெல்கி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "ஆரம்பம் முதல் முடிவு வரை குறையற்ற பயணமாக இது அமைந்தது. இது எனது முதல் விமானம், ஆனால், இது நிச்சயமாக கடைசி விமானப் பயணமாக இருக்காது" என்று பதிவிட்டுள்ளார்.

ருமேசா கெல்கி அமெரிக்காவில் உள்ள ஐடி நிறுவனம் ஒன்றில் பணிபுரியவுள்ளார், இதற்காகவே இப் பயணத்தை அவர் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டுவிட்டர்

# தவறு செய்துவிட்டோம்

## ஊழியர்களை மீண்டும் அழைக்கும் எலோன்

உலக பணக்காரர்களின் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா ,ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் (Elon musk), பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை அண்மையில் கைப்பற்றினார்.

இந்நிலையில் "டுவிட்டரின் முன்னணி அதிகாரிகள் தன்னையும் டுவிட்டரையும் தவறாக வழிநடத்துவதாகத்" தெரிவித்த எலோன் மஸ்க் டுவிட்டரின் தலைமை செயற்பாட்டு அதிகாரி- பராக் அகர்வால், தலைமை நிதி அதிகாரி- நெட் செகல், உள்ளிட்ட பலரை பணி நீக்கம் செய்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 9 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.